சமூக விஞ்ஞான கற்கை வட்டம்
செய்திமடல் - 50 | 10-05-2012



## 03-05-2012 அன்று நடந்த உரையாடலின் பொழிப்பு

### தலைப்பு : இலங்கையின் தற்போதய பொருளாதார நிலைமை

இன்றைய நிலைமை இலங்கையில் அரசியல்வாதிகளும் சரி அதிகாரிகளும் சரி எல்லோரும் 'இலங்கை இப்போது அபிவிருத்திப் பாதையில் சென்று கொண்டிருக்கின்றது' என்று சொல்லுகின்றார்கள். இந்த அபிவிருத்தி எவ்வளவு தூரம் மக்களைச் சென்றடைந்திருக்கிறது அல்லது எந்த அளவுக்கு மக்கள் நலன் கருதி செய்யப்படுகின்றன என்ற கேள்வியுடன் கலந்துரையாடல் ஆரம்பிக்கப்பட்டது.

இலங்கையின் அபிவிருத்தி, அதிலும் போருக்கு பின்னரான அபிவிருத்தி என்பது அரசாங்கத்தால் எப்போதும் சொல்லப்படும் சொல்லாக மாறிவிட்டது.

இறுதியாக வெளிவந்த மத்திய வங்கியின் அறிக்கையின்படி இலங்கையில் பொருளாதார வளர்ச்சி நடைபெற்றுள்ளது என்று குறிப்பிடப்பட்டுள்ளது.
ஆனால் அந்த அபிவிருத்தி மக்களைச் சென்றடையவில்லை என்றுதான் சொல்லவேண்டும். அத்துடன் இலங்கையின் அபிவிருத்தி உண்மையான விதத்தில் காட்டப்படுகிறதா என்று கேட்டால் அதுவும் இல்லை என்றுதான் சொல்லவேண்டும்.

இலங்கையைப் பொருத்தவரையில் அரசாங்கத்திற்கு என்று ஒரு நிலையான பொருளாதாரக் கொள்கை இல்லை. UNP அரசு என்றால் அது ஒரு கொள்கையுடனும்
SLPA அரசு என்றால் அது வேறுஒரு கொள்கையுடனும் நடந்து கொள்வதால் நாட்டுக்கென்று ஒரு கொள்கை இல்லை. இது நாட்டின் பொருளாதாரத்தில் தாக்கம் செலுத்துகிற ஒரு முக்கிய காரணி.


எங்களுடைய நாட்டின் பொருளாதாரம் இறக்குமதியில் அதிகம் தங்கியுள்ளது, இறக்குமதியைக் குறைத்து ஏற்றுமதியைக் கூட்டும் நவடிக்கைகளை அரசு செய்ய வேண்டும். வெறுமனே நெடுஞ்சாலைகள் அமைத்தல், துறைமுகம் அமைத்தல் என்பன மூலம் ஏற்றுமதியாளர்கள் திருப்தி அடைவார்கள் என்று இல்லை அவர்களுக்கான சந்தையை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். அதை எங்கள் அரசு செய்வதில்லை. சில உட்கட்டுமான வசதிகளின் பெருக்கம் நாட்டின் முழுமையான அபிவிருத்தியைக் காட்டாது.

அரசு காட்டும் நெடுஞ்சாலைகள் அமைத்தல், துறைமுகம் அமைத்தல் போன்ற அபிவிருத்திகள் பெரும்பாலும் வெளிநாடுகளின் உதவியில்தான் நடைபெறுகின்றது.
உதாரணமாக அம்பாந்தோட்டை துறைமுகம் சீனாவின் உதவியில் அமைக்கப்பட்டதால் குறிப்பிட்டளவு காலத்திற்கு சீனாவுக்கு வழங்கப்பட்டிருப்பதால்
அதிலிருந்து நாட்டுக்கு குறித்த காலத்துக்கு எந்தவித வருமானமும் வரப்போவதில்லை. ஆகவே அவற்றை அபிவிருத்தியின் அளவுகோலாக கருதமுடியாது.

பல நிர்மாணப்பணிகளுக்கு அரசு வெளிநாட்டு முதலீட்டையே நம்பியிருக்கவேண்டியுள்ளது ஏனென்றால் இலங்கையின் வரவு செலவுத்திட்டத்தில் பெரும் தொகை பாதுகாப்பு நடவடிக்கைக்கு ஒதுக்கபடுவதால் அரசிடம் போதியளவு முதலீடு இல்லாமல் உள்ளது. இதைத் தவிர அரச செலவீனங்கள் அதிகம். எண்ணிக்கை பெருத்த அமைச்சர்கள்,அவர்களின் அதிகாரிகள் எல்லோருக்கும் வழங்கும் கொழுத்த சம்பளங்கள் மற்றும் சிறந்த முகாமைத்துவம் இல்லாது நட்டத்தில் இயங்கும் அரச நிறுவனங்கள் போன்றவை சிறந்த உதாரணங்கள்.

மேலும் இலங்கை பெரும்தொகை பணத்தை வெளிநாட்டுக் கடனுக்கு வட்டியாக கட்டிவருவதாலும் இலங்கையால் மேற்கூறிய நடவடிக்கைக்கு முதலீடு போதாமலுள்ளது.

மிகுதி அடுத்த பக்கம்..



ஃபிராய்ட்

*சிக்மண்ட் பிராய்ட் (Sigmund Freud - மே 6, 1856 - செப்டெம்பர் 23, 1939)*

ஒரு ஆஸ்திரிய உளநோய் மருத்துவர். உளவியலின் உளப்பகுப்பாய்வுச் சிந்தனை முறையை நிறுவியவர். உள்மனம் (unconscious mind) பற்றிய இவரது கோட்பாடுகள், அடக்குதலுக்கு எதிரான பாதுகாப்புப் பொறிமுறை, உளப்பிணிகளை, பிணியாளருடன், உளப்பகுப்பாய்வாளர் பேசிக் குணப்படுத்துவதற்காக உளப்பகுப்பாய்வுச் சிகிச்சைச் செயல்முறைகளை உருவாக்கியமை என்பவற்றின் மூலம் பிராய்ட் பெரும் பெயர் பெற்றார். பாலுணர்வு விருப்பு என்பதை மனித வாழ்வின் முதன்மையான உந்து சக்தி என வரையறுத்தமை, இவரது சிகிச்சை நுட்பங்கள், உணர்வு மாற்றீட்டுக் கோட்பாடு (theory of transference), உள்மன ஆசைகளின் வெளிப்பாடாகக் கனவுகளை விளக்குதல் போன்றவை தொடர்பிலும் பிராய்ட் பெரிதும் அறியப்பட்டவர்.

பிரெஞ்சு தத்துவம் மற்றும் உளப்பகுப்பாய்வு துறையில் முக்கிய பங்காற்றிய யூங் மற்றும் லக்கான் ஆகிய இருவரும் தமக்கான அணுகுமுறைகளை சிக்மண்ட் பிராய்ட் இடமிருந்தே பெற்றுக் கொண்டார்கள். உளவியலில் பிராய்ட் இன் பாலியல் மட்டுமேயான மைய அணுகுமுறையை இருவருமே மறுத்தாலும் அவர்களது ஆய்வுச்செயற்பாடுகளுக்கு பிராய்டின் பிரதிகளே அடிப்படையாகும்.

### சமூக விஞ்ஞான கற்கை வட்டம்

**சமகால அரசியலிலும் சமூக வாழ்விலும் தொழிநுட்பத்திலும் நிகழும் முக்கிய நடப்புக்களை ஆழமாகக் கற்றறிந்துகொள்ளுமுகமாக வாரம் தோறும் வியாழக்கிழமைகளில் பிற்பகல் 5.30 மணிக்கு சமூக விஞ்ஞானக் கற்கை வட்டம் கூடுகிறது.**

**அரசியல், தொழிநுட்பம், சமூகம் எனப் பல்வேறு பரப்புக்களில் தெரிவு செய்யப்படும் தலைப்புக்களில் ஒவ்வொரு வாரமும் ஆழமான திறந்த கலந்துரையாடல் இடம்பெறும்.**

**நாம் வாழும் இந்தச் சமூகத்தைக் கற்றறிந்து புரிந்துகொள்ளவும் அப்புரிதலிலிருந்து இச்சமூகத்தை வளர்த்தெடுக்கவும் உங்கள் அனைவரையும் சமூக விஞ்ஞான கற்கை வட்டம் அழைக்கிறது.**

சமூக விஞ்ஞான கற்கை வட்டம்
தேசிய கலை இலக்கியப் பேரவை,
571/15. காலி வீதி,
வெள்ளவத்தை

0772307807
0772260165

**Facebook group :**
facebook.com/groups/ssscircle/

வலைத்தளம் :
circle.thulaa.net

## இலங்கையின் தற்போதய பொருளாதார நிலைமை
முன் பக்கத் தொடர்ச்சி...

இலங்கையின் வெளிநாட்டுக் கடன்களினால் பெரும்தொகை பணம் வட்டியாக நாட்டை விட்டுசெல்வதாலும் சில ஒப்பந்தங்கள் அடிப்படையில் வழங்கப்படும் வட்டியில்லாக் கடன்கள் உதாரணமாக அம்பாந்தோட்டை துறைமுகத்திற்கான கடன் நாட்டிற்கு வருமானம் ஈட்டிக்கொடுக்க முடியாமல் இருப்பதாலும் நாட்டின் பொருளாதாரம் வெகுவாகப் பாதிக்கப்பட காரணமாக உள்ளன.

இப்படியான ஒப்பந்தங்கள் மூலம் நாட்டின் ஒவ்வொரு பகுதியும் ஒவ்வொரு நாட்டிடம் இருப்பது இலங்கைக்கு மிகப்பெரிய பொருளாதார இழப்பாகும்.

இலங்கையில் ஏற்றுமதியில் உள்ள போதமையும் ஒரு முக்கிய காரணியாகும். இலங்கையின் முக்கிய ஏற்றுமதித் துறையாக உள்ளவை தேயிலை மற்றும் ஆடை உற்பத்தி. இதிலும் தேயிலை ஏற்றுமதியில் இந்தியா, கென்யா போன்ற நாடுகளது போட்டியும் ஆடை உற்பத்தியில் வெறுமனே தையற்காரர்களாக மட்டுமே நாம் இருப்பதாலும் இலங்கையின் ஏற்றுமதித் துறை மிகப் பின்தங்கியநிலையில் உள்ளதாக கருதமுடியும்.

தற்போது நாட்டின் தேயிலையின் உற்பத்தி அளவும் குறைந்து கொண்டே செல்கின்றது. நாங்கள் ஏற்றுமதிசெய்யும் பொருட்களுக்கான கேள்வி சர்வதேசச் சந்தையில் குறைந்துகொண்டே வருகின்றது.

நாட்டின் நாணயப்பெறுமதியைக் குறைப்பதன்மூலம் ஏற்றுமதியை அதிகரிக்கலாம் என்ற அடிப்படையில் இலங்கை நாணயப் பெருமதியைக் குறைத்தது. இதன் மூலம் நாட்டிற்கு வருமானம் கூடுதலாக வரும் என்று இலங்கை கணித்தது ஆனால் நாம் கட்டவேண்டிய கடன் தொகையும் அதிகரிக்கும் என்பது கவனத்தில் கொள்ளப்படவில்லை.

நாணயப் பெறுமதி மதிப்பிறக்கம் என்பது சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனையின் மூலம் நடைபெற்ற ஒன்றாகும். அதுமட்டுமல்லாமல் நாணயப்பெறுமதியைச் சந்தையையே தீர்மானிக்க விடுமாறும் சர்வதேச நாணய நிதியம் நிபந்தனை விதித்துள்ளது. இது நடைபெற்றதால் டொலரின் விலை தொடர்ந்து அதிகரித்துச் செல்கின்றது.

இலங்கையில் தற்பொழுது வட்டிவிகிதம் அதிகரிக்கப்பட்டுள்ளது. எந்த ஒரு நாட்டில் வட்டிவிகிதத்தில் அதிகரிப்பு ஏற்படுகிறதோ அந்த நாட்டில் முதலீடு குறைவடையும்.

இலங்கையில் அளிக்கப்படும் இலவசக்கல்வியை பெற்றுக்கொண்டு அதன்பின் பல இளைஞர்கள் வெளிநாடு சென்று அங்கேயே தங்கிவிடுவதும் நாட்டிற்கு மற்றுமொரு முக்கியமான வருமான இழப்பாகும்.

மற்றும் வெளிநாடுவாழ் இலங்கையர்கள் இலங்கையில் முதலிடுவதில் எந்தவித ஆர்வமும் காட்டுவதாய் இல்லை. இவர்களைவிடவும் இலங்கையில் வசிப்பவர்கள்கூட இங்கு முதலிடுவதில்லை. இது இலங்கை வெளிநாட்டு முதலீட்டையே னம்பியிருப்பதற்கு ஒரு காரணமாகவும் உள்ளது.

எல்லாப் பொருட்களும் இறக்குமதியில் கிடைப்பதால் டொலரின் பெறுமதி ஏற ஏற பொருட்களின் விலையும் ஏறும். இறக்குமதியைக் குறைப்பதற்கான தற்காலிகமான தீர்வே நாணயபெறுமதி மதிப்பிறக்கம் நீண்ட காலத்தில் பலன் தருவதற்கு ஏற்றுமதியாளர்களை அரசு ஊக்குவிக்க வேண்டும். உள்நாட்டு உற்பத்திக்கான சிறந்த விலையை வெளியிடங்களில் பெறுவதற்கான வழிவகைகளை அரசு ஏற்றுமதியாளர்களுக்கு கொடுக்கவேண்டும்.

## எசமானே!
- ஆதித்தன்

நாங்கள் உம்மைத் தொழுகிறோம் எசமானே!
எங்களின் மீதான வன்புணர்வுகளுக்கிடையிலே
இடைவெளி தாரும்!
எங்களை சுவாசிக்க விடச் சொல்லிக்
கதறும் குரலைக் கேளும்.
நாங்கள் இறந்துவிடுவோம் எசமானே!

எங்களின் மீது இரக்கம் கொள்ளும்.
இரவுகளின் இறுதிகளில் எம்மை மிச்சம் வையும்.
கால்களால் எம் உணர்வுநுனிகளை நசிக்காதிரும்.
உமது பாதங்களில் இறைஞ்சிக்கிடக்கிறோம்.
நீர் தந்த கஞ்சியை
ஒருவாய் குடிப்பதற்கு அவகாசம் தாரும் எசமானே!
எமக்கு இதற்குமேலும் சக்தி இல்லை.
சொற்களும் இல்லை.

சொற்களால் அறியப்படமுடியாத நரகத்தை
அனுபவிக்க எம்மை அழுத்தாதீர்.
அற்பக்கோடுகள் எங்களை அழிக்காதீர்.
சிற்றெறும்புகள் நாங்கள்!
சிதைபட்ட வடுக்கள் சித்திரங்களாதல்
வதைபட்ட வலிக்கணங்கள் வந்துவந்துபோதல்
எதனையும் முறையிட மாட்டோம்.

எல்லாம் வல்ல எசமானே!
உதிரக்கறை நிறைய ஓங்கியும்மைக் கும்பிட்டோம்
பிய்க்கப்பட்ட சிறகுகளைப்பற்றியோ
பிளக்கப்பட்ட குதங்களைப்பற்றியோ
ஒருவார்த்தை பேசோம்.
இது உண்மை என்பதை அறிவீராக!
எங்கள் அழுகைக்கு இரங்கும் எசமானே!
எங்கள் உறக்கத்தை அனுமதியும் எசமானே!
பேச்சறுத்த பிணங்களாய்
உமதடிக்கீழ் உழல்வோம்!
மூச்சை விட்டொருக்கால்
வானத்தை
முழுதாகப் பார்க்கவிடும்.

### வணிகமயமாக்கப்பட்ட விளையாட்டு
இந்த வாரம் கலந்துரையாடப்படவுள்ள விடயப்பரப்பு

பொழுதுபோக்கிற்காக விளையாடப்பட்ட விளையாட்டு காசு கொட்டும் விளையாட்டாய் ஆனது எப்படி?

விளையாட்டு உணர்ச்சியை வர்த்தகமாக்கிய கழகங்களின் போட்டிகள்.

தொழிற்துறை முதலாளிகளை ஈர்த்த கிரிக்கெட்டின் பெரும் வர்த்தகம்.

இத்தகைய போட்டிகளில் நடைபெறும் ஊழல்கள்.

எந்த மாதிரியான வணிக வளம் அதற்குப் பயன்படுகிறது.

அதனுடன் தொடர்புடைய வணிக தாபனங்கள், மக்கள்

சாதாரண மக்களுக்கு அது கொடுக்கும் தோற்றம்

வணிக லாபங்கள்



சமூக விஞ்ஞான கற்கை வட்டத்தின் செய்தி மடல்களைப் படியெடுக்கவும் அச்சிட்டுப் பகிரவும் அனைவருக்கும் உரிமையுண்டு.
இதில் வெளிவரும் ஆக்கங்களை மூலத்தைக் குறிப்பிட்டு எங்கும் பிரசுரிக்கலாம்.
BY NC SA